முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

E.A.No. 05/2025 in E.P.No. – 12/2021

**மனுதாரர் தரப்பு சாட்சி–1 ராஜகோபால் திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 06.03.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) செல்லன் ஆசாரி என்பவர் யார் என்றால் எனது பெரியப்பா. ரவிச்சந்திரன், லட்சுமி நாராயணன் இருவரும் செல்லன் ஆசாரியின் பேரன்கள். 1997ல் நான் யாரிடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் செல்லன் ஆசாரி மற்றும் பொன்னுச்சாமியிடம் இருந்து வாங்கினேன். எனது கிரைய ஆவணத்தில் எனக்கு கிரையம் கொடுத்தவர்களுக்கு மேற்படி சொத்து எவ்வாறு பாத்தியம் என எழுதப்பட்டுள்ளது என்றால் பங்கு பிரிக்கப்பட்டதன் அடிப்படையில் பாத்தியப்பட்டது என கண்டுள்ளது. இருவருக்கும் எவ்வளவு நிலம் பாத்தியம் என்றால் தலா 15 சென்ட் பாத்தியம். அவ்வாறு தலா 15 சென்ட் பாத்தியம் எனது கிரைய ஆவணத்தில் உள்ளதா என்றால் இல்லை.

2) எனது கிரைய ஆவணத்தில் கிரையதாரரின் பட்டா எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் எனது கிரைய ஆவணத்தில் போடப்படவில்லை. சர்வே எண்.411/8ல் மொத்தம் ஒரு ஏக்கர் 94 சென்ட் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஒரு ஏக்கர் 94 சென்ட் நிலத்தில் நான் 15 சென்ட் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். 15 சென்டிற்கு அருகில் இதே சர்வே எண்ணில் முருகன், வீரப்பன் ஆகியோர்களின் நிலம் உள்ளது என்றால் சரிதான். அகிலாண்டத்தின் தகப்பனார் பெயர் வீரப்பன். அகிலாண்டத்தின் சித்தப்பா பெயர் முருகன்.

3) வீரப்பனுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் அவரது மகன் அகிலாண்டத்திற்கு பாகம் உள்ளது என்றால் சரிதான். நான் எனது கிரையதாரரிடமிருந்து 15 சென்ட் இடத்தை கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய மற்றொரு அயிட்டத்தின் சர்வே எண்.413/26ல் 8 சென்ட் வாங்கியுள்ளேன். மேற்படி 8 சென்ட் நிலத்திற்கு வடக்கிலும், மேற்கிலும் முருகன், வீரப்பனுக்கு நிலம் உள்ளதா என்றால் சரியல்ல. சர்வே எண்.413/26ல் மொத்தம் 57–1/2 சென்ட் நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 57–1/2 சென்ட் நிலத்தில் தான் நான் 7–1/2 சென்ட் நிலம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.412/1ல் மொத்தம் 2 ஏக்கர் 64 சென்ட் நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 2 ஏக்கர் 64 சென்ட் நிலத்தில் 25 சென்ட் நிலத்தை நான் கிரையம் வாங்கியிருக்கிறேனா என்றால் ஆமாம்.

4) மேற்படி நிலத்தை சுற்றிலும் வீரப்பன், முருகன் ஆசாரி நிலம் உள்ளது என்றால் சரிதான். வீரப்பன் நிலத்தில் தான் அகிலாண்டன் வழக்கு தாக்கல் செய்து சுவாதீனம் எடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்தில் தனியாக உட்பிரிவு செய்து பட்டா வாங்கி விட்டேனா என்றால் இல்லை. அகிலாண்டம் முதலில் நீதிமன்றம் மூலமாக சொத்தை அளவீடு செய்ய வந்தபோது மேற்படி சொத்துக்களுக்கு என் பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். 25.11.2025 தேதியில் தான் நான் கிரையம் பெற்ற சொத்துக்களுக்கு என் பெயரில் பட்டா வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். தற்போதும் நான் கிரையம் பெற்ற சொத்துக்கு தனியாக பட்டா வாங்காமல் கூட்டாக வாங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

5) அகிலாண்டம் நீதிமன்றம் மூலம் சுவாதீனம் எடுக்க மனு தாக்கல் செய்த சொத்திற்கும், இந்த சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அகிலாண்டத்தின் தாயார் பெயர் செல்லம்மாள். அகிலாண்டத்தின் தகப்பனார் பெயர் வீரப்பன். அவருக்கு இரண்டு மனைவிகள். இரண்டாம் மனைவியின் பெயர் செல்லப்பா. அகிலாண்டம் தாக்கல் செய்த பட்டாவில் செல்லம்மாள், செல்லப்பா இருவரின் பெயரும் உள்ளது என்றால் சரிதான். நிறைவேற்று மனுவின் சொத்திற்கும், எனது சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் மற்ற எதிர்மனுதாரர்களின் தூண்டுதலின் பேரில் மனுதாரர் அகிலாண்டத்திற்கு வீண் இடையூறு கொடுக்க வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனுவில் எவ்வித முகாந்திரமும் இல்லாததால் இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**